සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 61 T

சுட்டெண் ..........................................

# புவியியல்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.**
- **01 முதல் 05 வரையான வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. சூரியன் உதிக்கும் திசையை பார்த்து இரு கைகளையும் இரண்டு பக்கமும் நீட்டி நிற்கும் போது

    உங்களது வலது கை ................................................ திசையை காட்டி நிற்கும்.
    (வடக்கு / தெற்கு / வடமேற்கு)

02. குறைந்த வேகத்தில் வீசும் காற்று ................................................ எனப்படும்.
    (இயற்கை காற்று / சூறாவளி / மென்காற்று)

03. இலங்கையின் அநுராதபுரம், பொன்னறுவை வரலாற்று நகரங்கள் இரண்டும் ................................................ மாகாணத்துக்கு உரியதாகும்.
    (வடமேல் / வட மத்திய / ஊவா)

04. புவிக்கு வெப்பமும், வெளிச்சமும் கிடைப்பது ........................................... ஆகும்.
    (நட்சத்திரத்தால் / சூரியனால் / வளிமண்டலத்தால்)

05. வடக்குத் திசைக்கும் மேற்குத் திசைக்கும் இடையே ...................................... திசை அமைந்துள்ளது.
    (தென்கிழக்கு / தெற்கு / வடமேல்)

- **இலக்கம் 06 முதல் 10 வரையான வினாக்களை வாசித்து அவை சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் கொடுக்கப்பட்டுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக..**

06. இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ளது. ( )
07. திட்டப்படமொன்றை வரையும் போது திசையை காட்டுவது முக்கியமல்ல. ( )
08. வலயம் மற்றும் பிரதேச அடிப்படையில் காலநிலை நிலைமைகள் மாற்றமடையாது. ( )
09. மழை வருவதற்கு முன்னல் வானத்தில் இருள் சூழ்ந்த தடித்த முகில்களை அவதானிக்கலாம்.( )
10. காற்று வீசும் திசையில் மரங்களின் கிளைகளும் வளையும். ( )

- **இலக்கம் 11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. இலங்கையின் மேல்மாகாணத்துக்கு சொந்தமான மாவட்டம் எது?
    1. பதுளை  2. களுத்துறை  2. அம்பாறை  4. கேகாலை

12. வானிலை தன்மைகளை அறிந்து கொள்வதால் சேதங்களை அதிகமாக குறைத்து கொள்ள முடியுமாதல் பின்வருவோரில் யாருக்கு?
    1. ஆசிரியர்கள்  2. வியாபாரிகள்
    3. மீனவர்கள்  4. மரத்தளபாட உற்பத்தியாளருக்கு

13. மழைவீழ்ச்சி போதாமையால் ஏற்படக்கூடிய அனர்த்தம் பின்வருவனவற்றில் எது?
    1. வெள்ளப்பெருக்கு  2. சூறாவளி  3. மண்சரிவு  4. வரட்சி

14. காற்றின் திசையை அளவிடும் கருவியை காட்டும் விடை,
    1. வேகமானி  2. அனிலமானி  3. வெப்பமானி  4. காற்றுத்திசைக்காட்டி

15. இலங்கையில் பனியுடன் கூடிய காலநிலைத் தன்மை அதிகம் காணக்கூடிய மாவட்டம் எது?
1. மொனராகல 2. வவுனியா 3. மன்னார் 4. நுவரெலிய

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களின் இடைவெளிக்குப் பொருத்தமான விடையை கீழேயுள்ள அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுதது எழுதுக.**

இலங்கையின் மிகச்சிறிய நிர்வாக அலகு கிராம உத்தியோகத்தர் பிரிவாகும். ஒரு கிராமம் அல்லது பல் கிராமங்கள் ஒன்றிணைந்து கிராம உத்தியோகத்தர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. எல்லா கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் குறிப்பிட்ட 16. .............................. மற்றும் 17. .................................... உண்டு. கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பல ஒன்றிணையும் போது 18. ........................................... பிரிவு உருவாகின்றது. 19. ........................................... இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்டதோ இணையும் போது 20. ........................................... உருவாக்கப்படுகிறது.

(மாவட்டம் / மாகாணம் / இலக்கம் / நகரம் / பெயர் / பிரதேச செயலாளர்)


* * * * *

## பகுதி II


- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**

01. அ) கீழே தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை காட்டும் ஆங்கில எழுத்து எது? (பு. 01)
2. இலங்கையின் மிகப்பெரிய மாவட்டத்தையும் மிகச்சிறிய மாவட்டத்தையும் காட்டும் ஆங்கில எழுத்துக்களை முறையாக எழுதுக. (பு. 02)
3. தென் மாகாணத்திற்குரிய மாவட்டமொன்றை காட்டும் ஆங்கில எழுத்து எது? (பு. 01)
4. குருணாகல் மாவட்டத்திற்கு அண்மையிலுள்ள மத்திய மாகாணத்துக்கு சொந்தமான இரு மாவட்டங்களை குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதுக. (பு. 02)
5. D எழுத்தால் காட்டப்படும் மாவட்டம் எந்த மாகாணத்திற்கு உரியது? (பு. 02)
6. இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது? (பு. 02)




ஆ) கீழே தரப்பட்டிருக்கும் சமன்புர கிராமத்தின் திட்டப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. பாடசாலைக்கு வடக்கில் அமைந்துள்ள கட்டிடத்தை பெயரிடுக. (பு. 01)
2. பாடசாலைக்கு தெற்கில் அமைந்துள்ள கட்டிடத்தை பெயரிடுக. (பு. 01)
3. பாடசாலைக்கு மேற்கே அமைந்துள்ள கட்டிடத்தை பெயரிடுக. (பு. 01)
4. தபால் காரியாலயம் பாடசாலையின் எத்திசையில் அமைந்துள்ளது? (பு. 01)
5. வைத்தியசாலை அமைந்திருப்பது பஸ்நிறுத்துமிடத்தின் எத்திசையிலாகும். (பு. 01)
6. மக்கள் வங்கிக்கு தெற்காக அமைந்திருப்பது எந்த கட்டிடமாகும். (பு. 01)


02. 1. காலநிலைத் தரவுகளை பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| காலநிலை மூலகம் | அளவிடும் கருவி | அலகு |
|---|---|---|
| 1. ................................ | 2. .................................................. | மில்லிமீற்றர் |
| வெப்பநிலை | 3. .................................................. | 4. .................................................. |
| காற்றின் வேகம் | 5. .................................................. | 6. .................................................. |
| 7. ............................... | 8. .................................................. | அம்புக்குறியால் காட்டப்படும் திசை |

(பு. 07)

2. வானிலைத் தகவல்களை அறிந்து கொள்வதால் மனிதனுக்கு கிடைக்கும் பிரயோசனங்கள் இரண்டை எழுதுக. (பு. 04)

03. மழைவீழ்ச்சி செயன்முறை இடம்பெறக்கூடிய முறையை கீழே படம் காட்டுகின்றது.




1. இங்கு A, B, C, D ஆகிய எழுத்துக்களால் காட்டப்படும் நான்கு செயற்பாடுகளையும் பெயரிடுக. (பு. 08)
2. மழைவீழ்ச்சியால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் மூன்றை எழுதுக. (பு. 03)

04. 1. காலநிலை நிலைமைகளை காட்டும் பின்வரும் படத்தில் A, B, C மற்றும் D னால் காட்டப்படும் சந்தர்ப்பங்களை முறையாகப் பெயரிடுக. (பு. 04)




2. பின்வரும் காலநிலைத் தரவுகளை நன்றாக வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இன்று முற்பகல் 9.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 2500mm க்கும் அதிகமான மழைவீழ்ச்சி வட்டவளை பிரதேசத்திலும் $32^0$C உயர்வெப்பநிலை பொலன்னறுவையிலும் பதிவாகியது. குறைந்த வெப்பநிலையானது $12^0$C நுவரெலியாவிலும் பதிவாகியுள்ளது. தென்மேற்கு திசையிலிருந்து வீசும் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு கிலோமீற்றர் 120 வரையாகும். நாட்டைச் சுற்றியுள்ள கரையோரப் பிரதேசங்களில் ஓரளவுக்கு அலை வீசக்கூடும். எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கு, வடக்கு மற்றும் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களுக்கு கடுமையான மழை கிடைக்கும்.

அ) வானிலை அறிக்கையின்படி ஆகக்கூடியதும் மற்றும் ஆகக்குறைந்த வெப்பநிலையும் எவ்வளவு? (பு. 02)

ஆ) வானிலை அறிக்கையின்படி ஆகக்கூடிய மழைவீழ்ச்சி எவ்வளவு? (பு. 01)

இ) குறைந்த வெப்பநிலை பதிவாகியுள்ள மாவட்டம் எது? (பு. 01)

ஈ) அதிக மழைவீழ்ச்சி கிடைத்துள்ள பிரதேசம் எது? (பு. 01)

உ) நாட்டிற்குள் காற்றம் வீசும் திசை யாது? (பு. 01)

ஊ) இவ்வானிலை அறிக்கையினூடாக குறிப்பிடப்பட்டுள்ள வானிலை எதிர்வு கூறல் யாது? (பு. 02)

05\. 1. இலக்கம் 1 தொடக்கம் 8 வரை காணப்படும் படங்களை நன்றாக அவதானித்து வீடுகளின் அமைவிடம் தொடர்பான பொருத்தமான கூற்றுக்கு எதிரே தரப்பட்டுள்ள கூட்டினுள் அதன் இலக்கத்தை எழுதுக.




* நகரச் சூழலில் அமைந்துள்ள வீடு
* சாய்வான பகுதியில் அமைந்துள்ள வீடு
* சமவெளியில் அமைந்துள்ள வீடு
* மலைப்பாங்கான நிலத்தில் அமைந்துள்ள வீடு
* கரையோர சூழலில் அமைந்துள்ள வீடு (பு. 05)

2\. இங்கு காணப்படும் தகவல்களின் பௌதிக அம்சங்கள் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சஙகள் எது என்பதை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
(காடு, உயர்நிலம், கட்டிடம், நதி, பூந்தோட்டம், பயிர்நிலம்) (பு. 06)


06\. தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி குறுக்கெழுத்து சட்டகத்தை பூரணப்படுத்துக.

<u>இடமிருந்து வலம்</u>

1. மழைவீழ்ச்சியை அளவிடும் அலகு
2. வானிலையை எதிர்வு கூறுவது
3. சூரியன் உதிக்கும் திசை
4. கழிவுப் பொருட்களை உண்ணும்
5. குறிப்பிட்டதோர் பிரதேசத்தின் குறகிய கால வளிமண்டல நிலைமை

<u>மேலிருந்து கீழ்</u>

1\. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று
3\. சுற்றாடலுக்கு அழகை சேர்ப்பது
6\. ஒடுங்கிய நீராவி இவ்வாறு பூமியில் விழும்.
7\. யாழ்ப்பாணம் இந்த மாவட்டத்திற்கு உரியது.
4\. வானிலை மூலகம் ஒன்று
8\. பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும்.




(பு. 11)

07. 1. இலங்கைக்கு இடம்பெயர்ந்து வரும் இரு பறவைகளின் பெயர்களை குறிப்பிடுக. (பு. 02)

2. தாவரங்களால் மிருகங்களுக்கு கிடைக்கும் பயன்கள் இரண்டையும், மனிதனுக்கு கிடைக்கும் பயன்கள் இரண்டையும் எழுதுக. (பு. 04)

3. “அ” நிரலுக்கு பொருத்தமான விடையை “ஆ” நிரலிலிருந்து தெரிந்தெடுத்து தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. கிளி | A. பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும் |
| 2. காகம் | B. நெல்வயல்களை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழித்துவிடும். |
| 3. கரையான் | C. மண்ணை அளகச்செய்யும். மண்ணை செழிப்படையச் செய்யும். |
| 4. செண்பகம் | E. சூழலுக்கு அழகை சேர்க்கும் |
| 5. தும்பி | F. கழிவுப் பொருட்களை உண்ணும். |

(பு. 05)

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - புவியியல் (61)**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01. | தெற்கு | 02. | மென்காற்று |
| 03. | வடமத்திய | 04. | சூரியன் |
| 05. | வடமேற்கு | 06. | சரி |
| 07. | பிழை | 08. | பிழை |
| 09. | சரி | 10. | சரி |
| 11. | களுத்துறை | 12. | மீனவர்கள் |
| 13. | வரட்சி | 14. | அனிலமானி |
| 15. | நுவரெலியா | 16. | பெயர் |
| 17. | இலக்கம் | 18. | பிரதேச செயலாளர் பிரிவு |
| 19. | மாவட்டம் | 20. | மாகாணம் |

**பகுதி II**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | அ) | 1. | | B | 1 |
| | | 2. | | பெரியது F, சிறியது D | 2 |
| | | 3. | | C | 1 |
| | | 4. | | G, K | 2 |
| | | 5. | | மேற்கு | 2 |
| | | 6. | | வடக்கு | 2 |
| | ஆ) | 1. | | வைத்தியசாலை | 1 |
| | | 2. | | பௌத்த கோயில் | 1 |
| | | 3. | | பஸ் நிறுமத்துமிடம் | 1 |
| | | 4. | | கிழக்கு | 1 |
| | | 5. | | வடகிழக்கு | 1 |
| | | 6. | | தபால் காரியாலயம் | 1 |
| | | | | | 16 |
| 02. | அ) | 1. | | மழைவீழ்ச்சி | |
| | | 2. | | மழைமானி | |
| | | 3. | | வெப்பமானி | |
| | | 4. | | செல்சியஸ் / பரனைட் | |
| | | 5. | | காற்றுவிசைமானி | |
| | | 6. | | மணித்தியாலத்திற்கு கிலோமீற்றர் | |
| | | 7. | | அவதானிப்பதன் மூலம் | 7 |
| | ஆ) | | ➤ | நாளாந்த செயற்பாடுகளை ஒழுங்கமைகக்க. | |
| | | | ➤ | இயற்கை அனர்த்தம் பற்றி முன்னரே அறிந்து கொள்ள. | |
| | | | ➤ | மீனவரும் விவசாயிகளும் அவர்களது செயற்பாடுகளை வெற்றிகரமாக செய்து கொள்ள. | 4 |
| | | | | | 11 |
| 03. | 1. | | | A. ஒடுங்கல் B. ஆவியாதல் C. கழுவு நீரோட்டம் D. மழை பொழிவு | 8 |
| | 2. | | | நீரினால் பெறப்படும் பிரயோசனங்களை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. | 3 |
| | | | | | 11 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. | 1. | | | A. வெப்பமான வானிலை | |
| | | | | B. மழைவீழ்ச்சியுடனான வானிலை | |
| | | | | C. குளிர் மூடுபனியுடனான வானிலை | |
| | | | | D. காற்றுடனான வானிலை | 4 |
| | 2. | அ) | | A. அதிகம் $32^0C$, குறைந்தது $12^0C$ | 2 |
| | | ஆ) | | 2500mm | 1 |
| | | இ) | | நுவரெலியா | 1 |
| | | ஈ) | | வட்டவல | 1 |
| | | உ) | | தென்மேற்கு திசை | 1 |
| | | ஊ) | | மழையுடனான காலநலை | 1 |
| | | | | | 11 |
| 05. | 1. | | | A - வெப்பமான காலநிலை B - மழைவீழ்ச்சியுடனான காலநிலை | |
| | | | | C - குளிர் மூடுபனியுடனான காலநிலை | |
| | | | | D - காற்றுடனான காலநிலை | 5 |
| | 2. | | | பௌதிக அம்சம் | |
| | | | | காடு, உயர்நிலம், நதி | |
| | | | | பண்பாட்டம்சம் | |
| | | | | கட்டிடம், பூந்தோட்டம், பயிர்நிலம் | 6 |
| | | | | | 11 |
| 06. | | | | இடமிருந்து வலம் | |
| | 1. | | | மில்லிமீற்றர் | |
| | 2. | | | தவளை | |
| | 3. | | | கிழக்கு | |
| | 4. | | | காகம் | |
| | 5. | | | வானிலை | |
| | | | | மேலிருந்து கீழ் | |
| | 1. | | | மின்னல் | |
| | 3. | | | கிளி | |
| | 4. | | | காற்று | |
| | 6. | | | பனி | |
| | 7. | | | வடக்கு | |
| | 8. | | | செண்பகம் | |
| | | | | | 11 |
| 07. | 1. | | ➤ | காவியுடைக்கள்ளி | |
| | | | ➤ | வெள்ளைப்பிடவை கள்ளி | |
| | | | ➤ | சிட்டுக்குருவி | 2 |
| | 2. | | | மிருகங்களுக்கு கிடைக்கும் நன்மைகள் | |
| | | | ➤ | உணவு கிடைக்கும், இருப்பிடம் கிடைக்கும். | |
| | | | | மனிதனுக்கு கிடைக்கும் நன்மைகள் * | |
| | | | ➤ | உணவு கிடைக்கும். | |
| | | | ➤ | நிழலைத் தரும் | |
| | | | ➤ | எரிபொருளை வழங்குதல் | |
| | | | ➤ | குளிர்ச்சியை வழங்குதல். | 4 |
| | 3. | 1. | | E | |
| | | 2. | | F | |
| | | 3. | | D | |
| | | 4. | | A | |
| | | 5. | | B | 5 |
| | | | | | 11 |